# சுதந்திரக் கட்சி
# தேர்தல் அறிக்கை

1640

யுணர்ச்சி வேகமாக குறைந்து வருகிறது. மொழிப் பிரச்னைகள், பாசன நீர்த்தகராறுகள், ராஜ்ய எல்லைச் சண்டைகள் ஒருபுறம் ஒருமைப் பாட்டைச் சிதைக்கின்றன. மறுபுறம் நிலச்சொந்தக்காரர்கள்-குத்தகைக்காரர்கள், ஆசிரியர்—மாணவர், முதலாளி—தொழிலாளி ஆகியோர்களின் பரஸ்பரத் தகராறுகள் காரணமாக நாடு பிரிவு உணர்ச்சிகள் மலிந்து தனக்குத் தானே அவலநிலையில் காட்சியளிக்கிறது.

பொது வாழ்க்கையின் நேர்மையைக் காணுமிடத்து, லஞ்சமும், ஊழலும், திறமையின்மையும், சலுகைகளும் வாழ்க்கையின் ஆதாரமுறைகளாகி விட்டன. பணத்தாசையும், அதிகாரமும், உத்யோக வேட்டையுமே மக்கள் சமுதாயத்தின் முக்கிய ஆட்டிப் படைக்கும் சக்திகளாக அமைந்து விட்டன. முதியோரிடையே காணப்படும் நேர்மைக் குறைவுகள் இளைஞர்களிடையே உயர்ந்த தத்துவங்களில் நம்பிக்கையிழக்கச் செய்துவிட்டன.

சர்வதேச அரசியலில், புத்திசாலித்தனமாக நண்பர் பகைவர்களைக் கண்டுகொள்ளும் விவேகமில்லாமல் தங்களே தங்கள் நலனுக்காகவே ஆக்கிரமிப்புக் கொள்கையை அனுசரிக்கும் நாடுகளுடன் கூடிச் சேர்ந்துகொண்டு, கோஷ்டி சேராமை, சகவாழ்வு, அமைதி, படைக்குறைப்பு போன்ற கோஷங்களை கிளிப்பிள்ளைகள் போல் பிதற்றிவரும் நிலைதான் இருக்கிறது. சீனு, பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக்கு எதிராக இந்தியாவின் பாதுகாப்புக்காக தென்கிழக்கு ஆசியப்பகுதியில் அமைக்கவேண்டிய பரஸ்பர பாதுகாப்புத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படவில்லை.

2. காங்கிரஸ் கட்சியின் இருபதாண்டு தொடர்ந்த ஆட்சி இப்படிப்பட்ட நிலையை உருவாக்கியுள்ளது. அந்தக் கட்சியேதான் ஆளத் தகுதியற்றதென்று சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துக் கொண்டுவிட்டது.

3. சிலர் வேறு வழி காணுமல் அயர்வுற்று ஆட்சியிடமும் காங்கிரசு கட்சியிடமும் மேலும் அதிகாரங்களைக் குவித்து மக்கள் சுதந்திரத்தை மேலும் குறைப்பதே இதற்குப் பரிகாரமென்று கூறுகிருர்கள். இத்தகைய யோசனைகள் வெளிப்படையாகக்கூறப்பட்டாலும் அல்லது மறைமுகமாகக் கூறப்பட்டாலும் அவைகளை சுதந்திரக்கட்சி ஆணித்தரமாக நிராகரிக்கிறது. சோஷலிஸம் என்ற பெயரில் சர்வாதிகாரமோ அல்லது அரசுடைமை ஆட்சியோ இதற்குப் பரிகார

# சுதந்திரக்கட்சி

## தேர்தல் அறிக்கை

## I

1. சுதந்திரம் பெற்று சுமார் இருபதாண்டுகளான பின்பும் நாடு எல்லாத் துறைகளிலும் சின்னாபின்னப் பட்டு நிற்கிறது.

அரசியல் துறையில், அரசியல் சாஸனம் பல தடவைகள் மீறப்பட்டும் மீறல்களைச் சரிசெய்யும் பொருட்டுத் திருத்தப்பட்டுமிருக்கிறது. ஜீவாதார உரிமைகள் அதில் ஒரு சாதாரண அத்தியாயமாக ஆக்கப்பட்டு விட்டது. ஜனநாயக ஸ்தாபனங்கள் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டு இப்பொழுது ஜனநாயகமே ஆபத்துக் குள்ளாயிருக்கிறது.

பொருளாதாரத்துறையில், தொழில் வாணிப முயற்சிகள் தெம்பிழந்துவிட்டன ; விவசாயம் அவமானப் படக் கூடிய வகையில் புறக்கணிக்கப்பட்டும், பாதிக்கப் பட்டும் கிடக்கிறது. கடுமையான வரிவிதிப்பும் விலைவாசி உயர்வும் வாழ்க்கைச்செலவை உயர்த்தி விட்டன. வெளிநாட்டு, உள்நாட்டுக் கடன் சுமைகள் நாட்டை நசுக்குகின்றன. நம் பொருளாதாரத்தின் திவாலான நிலைமை உள்நாட்டு நிதிக் கொள்கை களில் பற்றுக்குறை பட்ஜெட் மூலமும், வெளிநாட்டு நிதிக்கொள்கைகளில் நாணயமதிப்பு குறைப்பு மூல மும் நிரூபணமாக்கிவிட்டது. நாணயமதிப்பு குறைப்பைத் தொடர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால் நிலைமை மேலும் மோசமாகி விட்டது.

தேசீய ஒருமைப்பாடு, இத் துறையை கவனித்தால் காங்கிரசு கட்சி வர்க்கத் துவேஷத்தைப் போற்றி வளர்த்ததின் பயனாக மக்களிடையே பிளவுகள் உண்டாகி 1947-ல் நாம் பெற்ற தேசீய ஒற்றுமை

- விவசாயிகளின் நிலத்தை சர்க்கார் எதேச்சாதிகாரமாகப்பறிக்க அதிகாரமளிக்கும் அரசியல்சட்டத்தின் 17-வது திருத்தம் நிறைவேறுவதை ஓராண்டுக் காலம் தாமதிக்கச் செய்ததுடன், நிறைவேறியபின்னும் அத்திருத்தம் இதுவரை செயல்படாமல் இருக்கச் செய்துள்ளது.

- சுதந்திரக்கட்சியின் நிலவரி ஒழிப்புக் கோரிக்கை சில ராஜ்யங்களில் காங்கிரஸ் அரசாங்கங்களே இக் கோரிக்கையை ஏற்குமளவிற்கு கட்டாயப்படுத்தி விட்டது.

- தங்கக் கட்டுப்பாட்டை தீவிரமாக எதிர்த்ததின் மூலம் சுதந்திரக் கட்சி பொற் கொல்லர்களும், கலைத் தொழிலாளிகளும், கிராமப்புற மக்களும், தங்கள் போராட்டத்தில் ஓரளவு வெற்றி பெற உதவியது.

- அத்தியாவசியப் பண்டங்கள் கட்டுப்பாடு திருத்த மசோதாவின் கொடுமையிலிருந்து உணவு தானிய உற்பத்தியாளர்களை விடுவிக்க சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாடுபட்டு வெற்றி கண்டார்கள். அவர்களிடமிருந்து அதிகாரிகளால் எதேச்சாதிகாரமாக பறிமுதல் செய்யப்பட்ட பண்டங்கள் மீட்கப்பட்டன.

- பொது வாழ்வில் ஊழல்களைக் களைய 'மக்கள் நல அதிகாரி' (Ombudsman)க்குச் சரியான ஒருவரை நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென்று முதன் முதலாகச் சுதந்திரக் கட்சி எழுப்பிய கோரிக்கை இப்பொழுது ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது.

- பாராளுமன்றத்திலும், சட்ட சபைகளிலும் அரசாங்கம் கொண்டு வந்த மசோதாக்களில் அடங்கியுள்ள அநீதிகளை, பரிசீலனைக் கமிட்டிகளில் (Select Committee) சுதந்திரக்கட்சி எம். பி.க்களும், எம். எல். ஏ.க்களும், கணிசமான அளவு குறைத்திருக்கின்றனர்.

- வருடாந்திர பட்ஜெட்டுகளை நுட்பமாக ஆராய்ச்சி செய்து சுதந்திரக் கட்சி எம். பி.க்களும், எம். எல். ஏ.க்களும் நேர்முக, மறைமுக வரிகளில் நிவாரணங்கள் கிடைக்கச் செய்ததுடன் அரசாங்கத்தின் செலவையும் குறைக்கச் செய்துள்ளனர்.

- மூன்றாவது திட்டம் பற்றியும், பணவீக்கக் கொள்கைகள் பற்றியும் சுதந்திரக் கட்சியின் எச்சரிக்கைகள் சரியானவை என்று நிரூபிக்கப்பட்டு விட்டன. இந்தக் கொள்கைகளின் விளைவாக ரூபாய் மதிப்

மில்லையென்று சுதந்திரக்கட்சி கருதுகிறது. சீரான ஆட்சியில் கட்டுப்பாட்டு அடிப்படையில் தனி மனிதனின் ஆக்க சக்தி பொதுநலனுக்காக ஈடுபடுத்தப்பட்டு, வளர்க்கப்பட்டு, பயன் படுத்தப்பட்டாலே நாட்டில் தார்மீக மலர்ச்சியும், வாழ்க்கை வளமும் ஏற்படும் என்பது சுதந்திரக் கட்சியின் நம்பிக்கை.

4. மேற்கண்ட அடிப்படையில் சுதந்திரக்கட்சி இந்தத் தேர்தல் அறிக்கையை மக்கள் ஏற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கிறது. காங்கிரசு கட்சியின் 20 ஆண்டு தொடர்ந்த ஆட்சியால் ஏற்பட்டுள்ள இப்போதைய குழப்பங்களிலிருந்துநாட்டை மீட்கும் பணி கடினமானதாகும். அதிகாரத்தை நிரந்தரமாகத் தானே ஏகபோகமாக அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையால் காங்கிரஸ் கட்சி உண்டாக்கிய கொள்கைக் குழப்பங்களாலும் ஊக்குவித்த சச்சரவுகளாலும், போட்ட ஊதாரித் திட்டங்களாலும், ஏற்பட்ட கோளாறுகளை சீர்படுத்த அவகாசம் வேண்டும். இந்தக் கஷ்டங்களைக் கடந்தாகவேண்டும். கடக்கவே செய்வோம்.

## II

5. கட்சி ஆரம்பித்து இரண்டரை ஆண்டு காலத்திலேயே 1962 சுதந்திரக் கட்சி பொதுத்தேர்தலில் போட்டியிட்டபோது 95 லட்சம் மக்கள் அதாவது வாக்களித்தவர்களில் சுமார் 8.25 சதவிதம், லோக் சபைக்கு நின்ற சுதந்திரக்கட்சி வேட்பாளர்களை ஆதரித்தார்கள். இந்த நிலையிலேயே இக்கட்சி பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும், மூன்று ராஜ்ய சட்ட சபைகளிலும் பிரதான எதிர்க்கட்சியாக திகழ்கிறது.

6. சுதந்திரக்கட்சிக்கு அளிக்கப் பட்டவாக்குகள் எக் காரணத்தாலும் வீணாகவில்லை. இக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும், ராஜ்ய சட்டசபை உறுப்பினர்களும் எண்ணிக்கையால் குறைவாகவிருந்தாலும் தரத்தாலும் திறமையாலும் அவர்களைப்போல் பன்மடங் உறுப்பினர்களின் வேலையைச் செய்துள்ளார்கள்.

### 7. சுதந்திரக்கட்சி இதுவரை சாதித்தவை எவை?

- சுதந்திரக்கட்சியின் எதிர்ப்பினால் "கூட்டுறவுப் பண்ணை" முயற்சிகளும், கூட்டுப்பண்ணை கெடுபிடிகளும் தளர்ந்ததுடன் விவசாயிகளின் நிலங்களும் அவர்களிடமே தொடர்ந்து இருக்கின்றன.

- மக்களுக்குப் போதிய உணவுப்பண்டம் கிடைக்கும் வகையில் விளைச்சலைப் பெருக்க விவசாயிகளுக்கு உதவும்.
- விவசாயம், தொழில்கள், வர்த்தகம், பஞ்சாயத்துகள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை தேவை யில்லாத அரசாங்கக் கட்டுப்பாடுகள், தலையீடுகளி லிருந்து விடுவிக்கும்.
- பர்மிட் - லைசென்ஸ் - கோட்டா ஆட்சிக்கு முடிவு கட்டும். அதன் மூலம் லஞ்ச ஊழலுக்குப் பரிவுச் சலுகைகளுக்கும் ஆதாரமான அடிப்படையை அகற்றும்.
- திட்டக்கமிஷனைக் கலைத்து நாசகரமான நான்காம் திட்டத்தை ஒழித்துக்கட்டும்.
- சர்க்கார் துறையிலும், தனியார் துறையிலும் ஏக போகத்தை முடிவுகட்டும்.
- மக்கள் நலனுக்காக நியாயமான சுதந்திரமான போட்டி வர்த்தக முறையை ஏற்படுத்தும்.
- மக்களின் உடைமைகளையும், உரிமைகளையும் அவர் களுக்கே வழங்கும்.
- உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு மறுபடி உயர வழிசெய்யும்.
- கட்டாய இலவச, ஆரம்பக் கல்வியளிக்கும்.
- மக்களுக்கு நல்வாழ்வை இன்றே இப்பொழுதே அளிக்கும்.
- இன்றைய நல்வாழ்வின் அடிப்படையில், நாளைய வளர்ச்சிக்கு அடிகோலும்.

## III

**11. இவை எல்லாவற்றையும் செய்யமுடியுமா ?**

ஆம், முடியும்.

அது இந்த முறையில் தான்.

**12. சீரான முன்னேற்றத்துக்கான சுதந்திரக் கட்சியின் திட்டங்கள் இவை.**

### பொது மக்களுக்கே முதலிடம்

13. சுதந்திரக் கட்சி பொது மக்களுக்கே முதலிடம் கொடுக்கிறது. அவர்களுக்கு ஆதாயமான வேலை

பைக் குறைக்கும்படி நேரிடும் என்று சுதந்திரக் கட்சி வெளியிட்ட முன்னறிவிப்பும் பலித்துவிட்டது.

- சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், கண்காணிப்புடன் இயங்கி மற்ற கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து மத்திய அரசிலும், ராஜ்ய அரசுகளிலும் நேர்மை யில்லாத பல மந்திரிகளை வெளியேறச் செய்திருக்கின்றனர்.
- சுதந்திரக் கட்சியின் பல ராஜ்யக் கிளைகள் வெற்றிகரமாக லஞ்ச ஊழலை வெளிப்படுத்தியதுடன் தங்கள் பணிகளின் பயனாக மக்களுக்கு சாதகங்களைச் செய்திருக்கின்றன.

8. சுதந்திரக் கட்சிக்கு ஓட்டளியுங்கள்; வரும் பிப்ரவரி தேர்தலில் லோக் சபைக்குக் குறைந்த பட்சம் 100 உறுப்பினர்களை அனுப்பிவையுங்கள் நாங்கள் காங்கிரஸ் கட்சியின் அலங்கோல ஆட்சிக்கு முடிவுகட்டி உங்களுக்கு

## புதுக்கொள்கை கொண்ட புதிய அரசாங்கத்தை

அளிக்க உறுதி கூறுகிறோம்.

9. அதே போல் ராஜ்ய சட்டசபைகளுக்கு ஆயிரம் எம். எல். ஏ.க்களை அதுவும், சில ராஜ்யங்களில் பெரும்பான்மை பெறும்படி சுதந்திரக்கட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுங்கள். அப்போது அந்த ராஜ்யங்களில் சுதந்திரக்கட்சி அரசாங்கங்கள் எப்படி மக்கள் வாழ்வின் இன்னல்களைக்களைந்து, வளப்படுத்த முடியும் என்பதைக் காண்பீர்கள்.

## 10. சுதந்திரக்கட்சியால் அமைக்கப்பட்ட அல்லது அதன் ஆதரவோடு நடைபெறும் ஆட்சி

- கடந்த இருபதாண்டுகளாக நிர்வாகம் செய்தவர்களால் படுகுழியில் தள்ளப்பட்ட பொருளாதாரத்தை மீட்டு வளர்ச்சியடையச் செய்யும்.
- சர்க்கார் செலவுகளைக் குறைக்கும்.
- நேர்முக, மறைமுக வரிகளைக் குறைக்கும். நில வரியை ரத்து செய்யும்.
- நிலங்களிலும், தொழிற்சாலைகளிலும் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம், விலைவாசி உயர்வைத் தடுப்பதுடன், ரூபாயின் மதிப்பை நிலையாக, நாணயமாக இருக்கச் செய்யும்.

கொடுத்து, அவர்களுக்கு உறுதியான உழுகிற உரிமை கொடுத்து நிலவரியை நீக்கி, விவசாயிகளுக்கு அத்தியாவசிய தேவையான கடன் வசதி, பாசன நீர், உரம், கிருமி நாசினி, விதை, மின்சார சக்தி போன்ற வசதிகள் போதிய அளவு அளித்து அவர்களுக்கு மென் மேலும் ஊக்கம் கொடுத்து அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்கு சுதந்திர சந்தையில் நிர்ணயமான குறைந்த பட்ச விலைக்குக் குறையாமல் நல்ல விலைக்கு விற்கும் உரிமையும் அளிக்க வேண்டும். நிலச்சொந்தக்காரர்களுக்கும் குடியானவர்களுக்கும் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்ட எல்லா ஊழியர்களுக்கும் இடையில் சுமுகமான கூட்டுறவு கட்சி உண்டாக்கும்.

19. பொது மக்களின் அத்தியாவசிய உணவுப் பண்ட தேவைகளுக்கு உத்திரவாதம் அளிக்க வேண்டும். அவசியமானுல் அரசாங்க மானியத்தின் மூலம் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் அளிக்கப்பட வேண்டும்.

20. நாடு முழுவதும் உணவுப் பொருள்களின் போக்குவரத்திற்கு தடையாக உள்ள மண்டலக் கட்டுப்பாடு போன்ற தடைகளையும் மற்ற எல்லா நிர்ப்பந்தமான கொள்முதல்களையும் சுதந்திரக் கட்சி நீக்கும்.

21. பயிரிடக்கூடிய நிலங்களுக்கு பாசன வசதியை அதிகரிப்பதற்காகக் கட்சி பல கிணறுகளை அமைக்கும். இந்தக் கிணறுகள் பல ஆண்டுகளில் தவணை முறையில் பணம் செலுத்தியபின் உழவர்களுக்கே சொந்தமாகும்.

22. இயற்கைக் கோளாறுகளால் அவ்வப்போது பாதிக்கப் பட்ட ராஜ்யங்களின் முயற்சிகளைப் பலப்படுத்துவதற்காக அகில இந்தியப் பஞ்ச நிவாரண இன்சூரன்ஸ் நிதி ஏற்படுத்தக் கட்சி முயற்சிக்கும்.

23. சில மலைப்பாங்கான இடங்கள், காட்டுப்பிரதேசங்கள் ஆகியவற்றின் பொருளாதாரத்தில் இடம் மாறும் விவசாயத்தின் முக்கியத்துவத்தைக் கட்சி உணர்ந்திருக்கிறது. ஆதிவாசிகளுக்கும், ஷெடியூல் பிரிவினருக்கும் அவர்கள் வாழ்க்கை வசதிகள் உயர்வதற்காக முன்னேற்றமான வேளாண்மைத் தேவைகளுக்குத் தகுந்தபடித் தங்களைச் சரிசெய்து கொள்ளுவதற்கு அவர்கள் செய்யும் முயற்சிகளை ஆதரிக்க கட்சி உறுதியளிக்கிறது.

24. இந்தியாவின் உழைப்பாளிகளில் பெரும்பாலோர் நிலமில்லாத விவசாயிகள். தொழிற்சாலைத் தொழிலாளிகளைப்போல் இவர்கள் ஒன்று சேராததால்

வாய்ப்புகள் அளிப்பதன் மூலம் உணவு, குடிநீர் வசதி, உடை, வீடு கிடைக்க வழிசெய்வதையே தன் முக்கிய கடமையாகக் கொள்ளும்.

14. தனி மனிதர்களின் சுதந்திரத்தையும் சொத்துரிமையையும், முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதையும் அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகத்தை அமைப்பதிலும், காந்திஜி எண்ணியபடி பொருளாதார பலத்தை பலமுகப்படுத்தி, சொத்துடமைகளை எல்லோரிடையிலும் பரவலாக்குவதிலும் சுதந்திரக் கட்சி நம்பிக்கை வைக்கிறது. அப்படிப்பட்ட சமூகத்திலேயே விவசாயி, கைத்தொழில் செய்பவர், கடைக்காரர், டாக்டர், வக்கீல் போன்ற சுயதொழில் செய்வோர் எத்தகைய எதேச்சாதிகார கட்டுப்பாடுகளுமின்றி வாழ்க்கையில் முன்னேற முடியும்.

15. சுதந்திர போட்டி அடிப்படைச் சமுதாயத்தில் உபயோகிப்போரே மன்னராவர்." (Consumer is king) அவர்களுக்குச் சேவை செய்வதிலேயே எல்லா உற்பத்தியாளரும், அரசாங்கமானாலும் சரி, பெருந்தொழிலதிபர்களானாலும் சரி, ஈடுபட்டிருப்பார்கள்.

16. பொருளாதாரத் துறை பூராவும் தண்ணீர் சப்ளை, மின் சக்தி, கிராம சாலைகள், நெடுஞ்சாலைகள் ரயில்வேக்கள், போக்கு வரவுக் கால்வாய்கள், துறைமுகங்கள், தந்தி, தபால் நிலையங்கள், டெலிபோன் போன்ற அத்தியாவசியமான அடிப்படைகளைக் கொண்டுள்ளது. காங்கிரஸ் அரசாங்கம் இந்தத் துறைகளை பெரிதும் புறக்கணித்து வந்துள்ளது. சர்க்காருடைய பொருள் வசதிக்கும் நிர்வாக சக்திக்கும் இந்ததுறைகளே போதுமானவைகளாக இருக்கும். மேலும் இவை பொறுப்பும், சிரத்தையும் கொண்ட எந்த நிர்வாகமும் தன் பணிகளைத் திருப்திகரமாகச் செய்து மன நிறைவு கொள்ளக் கூடிய அளவிற்கு இருக்கும்.

17. கொள்கை கோட்பாடுகளைவிடக் குடிமக்களின் நலனே புனிதமானது என்ற நியதியைக் கட்சி கடைப் பிடிக்கும்.

விவசாயம்

18. இது இந்தியாவின் அடிப்படைத் தொழில். அது நம் மக்களுக்குப் போதிய உணவும், தொழில்களுக்குக் கச்சாப் பொருள்களும் முழு வேலை வாய்ப்பும் அளிக்க முடியும். அந்த அடித்தளத்தின் மேல் தான் இந்தியாவின் நல் வாழ்வை அமைக்க முடியும். எனவே அதற்கு தக்க உயர்ந்த முதலிடம் கொடுக்க வேண்டும். இதற்கு அரசியல் சட்டத்தின் 17-வது திருத்தத்தை ரத்து செய்து, உழுகிறவர்களுக்கு நியாயமான பங்கு

மாற்ற வேண்டும். உற்பத்தியை அதிகரிக்கும் முதலீடுகளை வரிக்குறைப்பின் மூலமும், படிப்படியாகக் கட்டுப்பாடுகளை அகற்றுவதன் மூலமும் உற்சாகப்படுத்த வேண்டும். முதலீடு செய்பவர்களும், நிர்வாகிகளும் தொழிலாளிகளும் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும், பெருக்கி லாபத்தில் பங்கு பெற வழி செய்ய வேண்டும். இவையெல்லாம் அவசரத் தேவைகளாகும்.

26. அதிக முதலீடுகளை விழுங்கி குறைவாகவும், மெதுவாகவும் பலன் தரும் பெரும் திட்டங்களுக்கே இதுவரை சலுகை தரப்பட்டு வந்துள்ளது, அதைவிட சிறிய அளவிலும், நடுத்தர அளவிலும், அதிக மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய தொழில் முயற்சிகளுக்கு முதலிடமளித்து சீரான தொழில் வளர்ச்சிக்கு வழி செய்யும்.

27. இதுவரை சீராக இயங்காத சர்க்கார் துறைத் தொழில்களில், அவை நியாயமான பலன் தரத்தொடங்கும் வரையில், மேற்கொண்டு மேற்கொண்டு முதலீடு செய்து மக்களின் கடின உழைப்பின் மூலமும், சேமிப்பின் மூலமும் கிடைத்த வரிப்பணத்தைப் பாழாக்காது.

28. தனியார் துறையிலும் சர்க்கார் துறையிலும் சுதந்திரக் கட்சி ஏகபோகத்தை எதிர்க்கிறது. உபயோகிப்போரின் நன்மைக்காக இயன்ற இடங்களில் போட்டி வர்த்தகத்தை மீண்டும் நிலை நிறுத்தும். ஏகபோகம் அனுமதிக்கப்பட்ட இடங்களில் அவசியமான கட்டுப்பாடுகளுடன் இருக்கும்.

29. அத்தியாவசிய வசதிகளுக்கு தற்காலிகப் பற்றுக்குறை காரணமாக சர்க்கார் கட்டுப்பாட்டுக்கு அவசியமேற்பட்டால் முக்கியமானவற்றுக்கு முதலிடம் கொடுப்பதையும் ஒவ்வொரு இனத்துக்கும் எவ்வளவு ஒதுக்குவது என்பதையும் தீர்மானிக்க நீதித்துறை சார்புள்ள நிறுவனத்தை ஏற்படுத்தும்.

## தொழிலாளர்கள்:

30. சுதந்திரக் கட்சி தொழிற்சாலைகளிலும், விவசாயத்திலும் பாடுபடும் பாட்டாளிகளுக்கும் நியாயம் கிடைக்கப்பாடுபடும். பாட்டாளிகள் தங்கள் வாழ்க்கையையும் வேலையையும் உயர்த்திக் கொள்வதற்காக சங்கம் அமைத்துக்கொள்ளும் உரிமையைக் கட்சி ஏற்றுக்கொள்ளுகிறது. தற்பொழுது உள்ளது போல் அரசியல் கட்சிகளின் விளையாட்டுக் கருவிகளாக இல்லாமல் பாட்டாளிகளாலேயே நிர்வகிக்கப் பெறும் பலமான பொறுப்புள்ள தொழிற்சங்கம் ஜனநாயகமான தொழில் முறையின் பிரிக்கமுடியாத அம்சமாகும்.

முழு வேலையில்லாமல் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விலைவாசி உயர்வாலும், அன்றாட உபயோகப் பண்டங்களின் மீது விதிக்கப்படும் அநியாய வரிகளாலும் அதிகமாக பாதிக்கப்படுகிறவர்கள் இவர்களே. இவர்கள் நலனைக்காக்க சுதந்திரக்கட்சி கீழ்க் கண்டவாறு பாடுபடும்.

- நிரந்தரமாக விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களாக உழைக்கிறவர்களுக்கும், நியாயமான போதிய பாதுகாப்பளிக்கும்.
- அவர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கும் நியாயம் கிடைக்க வழிசெய்யும்.
- கிராமச்சாலை அமைப்பு, ஜலதாரைத் திட்டம். பூசாரப் பாதுகாப்புத் திட்டம், பயிரிடாமல் கிடக்கும் நிலங்களை விவசாயத்துக் கேற்றதாக பண்படுத்துதல் கிராமச் சிறுதொழில் வளர்ச்சி ஆகியவைகளுக்கு ஊக்கமளித்து நாட்டுபுறங்களில் மாற்று வேலைவாய்ப்புகள் பெருகச் செய்யும்.
- பண்டங்களின் மீது விதிக்கப்படும் மறைமுக வரியைப் பெருமளவு குறைத்து, வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுக்கும்.
- இலவசமாக வீடுகட்டும் மனைகள் கொடுத்தும், குடிநீர் வசதி செய்து தரும்.
- அவர்களுக்கு அரசாங்க மானியத்தின் மூலம் குறைந்த விலையில் வீடுகட்டுவதற்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கச் செய்யும்.
- கால்நடைகள் வாங்கவும், கோழிப்பண்ணை அமைக்கவும் கடன் வசதி அளிக்கும்.
- தலைமுறை தலைமுறையாக வரும் கடன்களை ரத்து செய்வதுடன் விவசாயக் கடன்களிலிருந்து அதிகபட்ச நிவாரணம் அளிக்கும்.
- தொடர்ந்த நஷ்டத்தை விளைவிக்கும் பெரிய அரசாங்க விவசாயப் பண்ணைகளையும், அரசாங்கத்தின் மற்ற விவசாய நிலங்களையும், சிறுசிறு பிரிவுகளாக்கி நிலமற்ற விவசாயிகளுக்குக் குத்தகைக்கு விடும்.

## தொழிலும் வியாபாரமும்

25. முதலீட்டுத் துறைக்கு ஊக்கமளிப்பதுடன் மூலம் தேக்கமடைந்து சீர்கெட்டு வரும் போக்கை

## நாணய நிதிக் கொள்கைகள்

37. முதல் முக்கியமான தேவை ரூபாயின் மதிப்பை நாணயமாக நிலை பெறச் செய்வதும், விலை வாசிகளை ஸ்திரப் படுத்துவதுமாகும். இதற்காக:

(அ) பற்றுக்குறை பட்ஜெட், பணவீக்கக் கொள்கைகள், செய்கைகள் ஊதாரித்தனமான வீணான உள்நாட்டுக் கடன்கள் ஆகியவற்றைக் கைவிடும்.

(ஆ) மத்திய அரசிலும், ராஜ்யங்களிலும், வீணான யதேச்சாதிகாரச் செலவுகளைப் பெருமளவில் குறைக்கும்.

(இ) நேர்முக, மறைமுக வரிகளைக் கணிசமாகக் குறைக்கும்.

## பாங்குகள்

38. பாங்குகளைத் தேசிய மயமாக்க வேண்டுமென காங்கிரஸின் உத்தேசத்தை சுதந்திரக்கட்சி எதிர்க்கிறது. ஏனெனில், அது இந்தியாவின் தற்கால பிரச்னைக்கு சம்பந்தமற்றது. நாட்டின் முன்னேற்றத்தைப் பாதிக்கும். மேலும் அது கிடைத்த மூலதனத்தின் மீதெல்லாம் கைவைக்கத் துடிக்கும்,சர்க்காரின் தயவுக்கு லட்சக்கணக்கானவர்களின் சிறுசேமிப்புப் பணத்தை விட்டு வைப்பதின் மூலம் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும், பாதுகாப்பிற்கும் சேமிப்புக்கும் நாசமுண்டாகும்.

## வெளி நாட்டுக் கடன்கள்

39. அன்னிய நாடுகளின் அரசாங்கங்களிடமிருந்து நம் அரசாங்கம் வாங்கும் ஊதாரித்தனமான வீணான கடன்களைக் குறித்து சுதந்திரக் கட்சி தொடர்ந்து விடுத்து வந்த எச்சரிக்கைகள் சரியானவை என்று தெளிவாகிவிட்டது. அரசாங்கத்தின் கட்டுக்கோப்பை வலுப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் தவிர சர்க்காருக்கு சர்க்கார் ரீதியில் மேலும் கடன்கள் வாங்கக்கூடாது. சொந்தப் பொறுப்பில் நம் நாட்டிற்கு வரும் அன்னிய தனியார் மூலதனங்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

## தங்கக் கட்டுப்பாடு

40. தங்கக்கட்டுப்பாடு சட்டம் அடியோடு ரத்து செய்யப்பட வேண்டும்.

அவசியமேற்பட்டால் வேலையை நிறுத்துவது உட்பட்ட கூட்டு பேர முறைகளில் பாட்டாளிகளுக்கு உள்ள உரிமையைக் கட்சி ஆதரிக்கிறது.

31. தொழில்களை நிர்வகிப்பதில் பாட்டாளிகளுக்கு நெருங்கிய இணைப்பு இருப்பதைச் சுதந்திரக்கட்சி ஆதரிக்கிறது. அப்படிச் செய்வதால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும் தாங்களும் பங்குதாரர்கள் என்ற உணர்வு ஏற்படும்.

32. நன்கு வேலை செய்வதற்கு நல்ல சம்பளம் என்பது கட்சியின் கொள்கை. உற்பத்திச் செலவை குறைப்பதன் மூலம் தேசிய நல்வாழ்வு என்ற பொது நோக்கத்திற்கு விரோதமில்லாமல் உற்பத்தியும் அதே சமயத்தில் ஊழியர்களின் ஊதியமும் உயரும். "முன்னேற்றத்தில் பங்கு" முறைக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

33. அரசாங்கம், அரசாங்க தொழில்துறை ஊழியர்களுக்கு சட்டபூர்வமாக உரிமைகளை மீண்டும் வழங்க முயற்சி செய்யும். மற்ற ஊழியர்களுக்கு உள்ள தொழில் சட்டங்கள் அவர்களுக்கும் பொருந்துமாறு செய்யும்.

**திட்டங்கள்:**

34. பிரான்ஸ், பிரிட்டன், ஸ்காண்டிநேவிய நாடுகள் ஆகிய இடங்களில் நடைபெறுவது போன்று மக்கள் அநுசரணையுடன் ஜனநாயக முறையில் திட்டமிடுவதை சுதந்திரக் கட்சி ஆதரிக்கிறது. இந்தியாவிலும், மற்ற நாடுகளிலும் பரிதாபகரமாக தோல்வியடைந்த வலுக்கட்டாயத்தைக் கொண்ட சோவியத் பாணி திட்ட முறையை சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது.

35. இரண்டாவது, மூன்றாவது திட்டங்களில் இருந்த சில குறைகளால் நாடு திவாலாகும் எல்லைக்கு வந்துவிட்டது. அதே குறைகள் கொண்ட நான்காம் திட்டம் நிராகரிக்கப்பட வேண்டும்.

36. திட்டக் கமிஷனை சுதந்திரக் கட்சி கலைத்துவிடும். ஏனெனில் அரசியல் சட்டத்தில் காணப்படாத இந்த திட்டக் கமிஷன், தானே ஒரு அரசாங்கம் போல இயங்கி வருகிறது. அது தன் வேலையில் தகுதியின்மையையும் காட்டியுள்ளது. அதற்குப் பதிலாகக் கைதேர்ந்த நிபுணர்கள் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து அதில் விவசாயம், தொழில் தொழிலாளர் துறையைச் சேர்ந்தவர்கள் இடம் பெற வழி செய்யும். அரசாங்கம் தன் அலுவல்களைத் தானே திட்டமிட உதவுவதே இத் திட்டக்குழுவின் முக்கிய நோக்கமாயிருக்கும்.

ரணைக்குட்படாத அதிகாரபூர்வமான முடிவுகள் சம் மந்தமான நீதி கிடைக்கத்தகுந்த ஏற்பாடாகவும்உதவும்.

48. முன்னாள் ராணுவத்தினருக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் திருப்திகரமான புனர் வாழ்வு அளிக்கும்.

49. அதிகமான விலைவாசி ஏற்றத்தைக் கருத்தில் கொண்டு ஓய்வுபெற்ற சர்க்கார் கடைநிலை ஊழியர்களுடைய பென்ஷன் தொகை மாற்றியமைக்கப்படும்.

## தேர்தல் சீர்திருத்தம்

50. கீழ்க்கண்ட வகையில் சுதந்திரக் கட்சி தேர்தல் முறையைச் சீர்திருத்த விரும்புகிறது.

(அ) தேர்தலில் பணத்தின் செல்வாக்கைக் குறைக்கவேண்டும். வேட்பாளர்கள் செய்ய வேண்டிய செலவையும் குறைக்கவேண்டும்.

(ஆ) தற்சமயம் பாராளுமன்றத்திலும், மாநில சட்ட சபைகளிலும் கட்சிகள் வாங்கிய ஓட்டுகளும், வெற்றி பெற்ற ஸ்தானங்களும் சரியான விகிதாசாரத்தில் இல்லை. இந்தக் கோளாற்றை முற்றிலும் நீக்க முடியா விட்டாலும் குறைக்கும் வகையில், சட்டசபைகளில் மக்கள் தீர்ப்பு சரியானவகையில் பிரதிபலிக்கும் முறையொன்றை வகுக்கும்.

## சர்வ தேச உறவும் தேசப் பாதுகாப்பும்

51. நேர்மையான தேசீய தன்னலமும், உலக ஐக்கியத்திற்காக பாடுபடுவதுமே சரியான அயல்நாட்டுக் கொள்கைக்கு அடிப்படைகளாக சுதந்திரக் கட்சி கருதுகிறது. இந்த அளவுகோல் கொண்டு பரீட்சித்தால் தொடர்ந்து ஆக்ரமிப்புகளும் உலகில் நாம் நண்பர்களற்று பரிதாபகரமாகத் தனித்து நிற்பதும், காங்கிரஸ் ஆட்சியின் வெளிநாட்டுக் கொள்கை படுதோல்வியடைந்து விட்டது என்பதை விளக்குகின்றன.

52. முதலில் கம்யூனிஸ்ட் சீனாவாலும், பின்பு பாகிஸ்தானாலும் நம் நாட்டின் மீது ஆக்ரமிப்பு நடந்த பிறகு கூட்டு சேராத்தத்துவம் அர்த்த மற்றுவிட்டது என்பது சுதந்திரக் கட்சியின் கருத்து. சர்வதேச நிலைமைக்கேற்ப நம் அயல்நாட்டுக் கொள்கையைப் பரிசீலனை செய்து உண்மை நிலைக்குத் தகுந்தபடி அமைக்க வேண்டியது அவசியம் என்று சுதந்திரக் கட்சி கருதுகிறது.

53. ராணுவ ஒப்பந்தங்களுக்கு எதிராக காங்கிரஸ் கட்சி திரும்பத் திரும்ப எழுப்பும் கோஷம் அர்த்த மற்றது. அண்டை நாடுகளில் சில ஆக்ரமிப்பு நோக்

## அரசியல் சாசனமும், பொது நிர்வாகமும்

41. நாட்டு அரசியல் சாசனத்தை அடிக்கடி திருத்தியதன் விளைவாக மக்களின் ஜீவாதார உரிமைகள் பெருமளவு பாதிக்கப்பட்டு விட்டது குறித்து சுதந்திரக் கட்சி வருந்துகிறது.

இயன்ற அளவு விரைவில் மக்களின் ஜீவாதார உரிமைகளை ஆரம்பகாலத்தில் இருந்த நிலைமைக்கு கொண்டு வர உறுதி கொள்கிறது.

42. நெருக்கடி நிலைச் சட்டத்தை அனுவசியமாக நீடித்து, காங்கிரஸ் அரசாங்கம் கட்சி நலனுக்காக அதைத்துஷ்பிரயோகம் செய்கிறது. இந்தச் சட்டத்தை சுதந்திரக்கட்சி ஒழித்துக்கட்டி மக்களுடைய உரிமைகளை மீண்டும் உடனடியாக அவர்களுக்கு வழங்கும்.

43. தகராறுள்ள சட்ட விஷயங்களில் நீதிமன்றங்களுக்குச் சென்று பரிகாரம் காண மக்களுக்கு உள்ள உரிமைக்கு மதிப்பளித்து சட்டங்கள் இயற்றப்படும்.

44. இக்கட்சி நாட்டிற்கு தூய நாணயமான நடுநிலைமையான நிர்வாகத்தை அளிக்கும். அரசாங்கம் அன்றாட நிர்வாகத்தின் ஆளும் கட்சியைச் சேர்ந்த அல்லது மற்ற கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தலையிடாமல் பார்த்துக் கொள்ளும். கட்சி மத்திய மாநில சர்வீஸ் கமிஷன்களின் சுதந்திரத்தில் தலையிடவோ அல்லது ஒதுக்கி விடவோ செய்யாது.

45. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்கே தலையாய முக்கியத்துவம் அளிக்கப்படும். மக்களின் உயிரையும், சொத்தையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் முதற் கடமையாகும். சர்க்கார் இதைச் செய்யத்தவறும்பொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான நஷ்டஈடு அளிக்கப்பட வேண்டும் என்று சுதந்திரக் கட்சி கருதுகிறது.

46. நீதி அதிகச் செலவில்லாமல், விரைவில் கிடைக்க வேண்டும்.

47. ஊழலைத் தடுக்கவும், எதேச்சாதிகார நீதியில் மக்கள் உரிமை பறிக்கப்படுவதைத் தவிர்க்கவும் மத்தியிலும் மாநிலங்களிலும் ஸ்காண்டிநேவியன் நாடுகளில் உள்ள "ஆம்புட்ஸ்மன்" (Omburds man) ஸ்தாபனத்தைப்போல் அதிகாரமும், சுதந்திரமும் கொண்ட ஸ்தாபனத்தை ஏற்படுத்த இக்கட்சி தொடர்ந்து வலியுறுத்தும். இது மக்களின் குறைகளையும் நிர்வாகக் கோளாறுகளையும் அநீதிகளையும் விசாரிக்கவும் பரிக்காரம் தேடவும் உதவும். நீதிவிசா

உணர்ச்சிகளும், உன்னதமான விஷயங்களில் பற்றில்லாமல் கோளாறுன மனோபாவங்களும் பரவி வருவதைத் தடுப்பதற்காக சுதந்திரக் கட்சி:

(அ) கல்வி போதனையில் விஞ்ஞானம், கலைகள் இவற்றோடு கூட ஆத்மீக அம்சத்தையும் சேர்த்து எதிர்காலப் பிரஜைகளுக்கு மனித வாழ்க்கையின் மதிப்புகளை உணர்த்துவதுடன், தேசீய ஒற்றுமையை அவர்கள் மனதில் பதியவைக்கும்.

(ஆ) தனி ஸ்தாபனங்கள் இளைஞர்களுக்கு மத சம்பந்தமாயும், நன்னடத்தை சம்பந்தமாயும் போதனை செய்ய சுதந்திரமும், ஊக்கமும் அளிக்கும். ஆனால் இப்போதனை மற்ற பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் மீது பலாத்காரமாக திணிக்கப்பட இடமிருக்காது.

58. சுதந்திரக் கட்சி

(அ) ராஜ்ய சர்க்கார்களின் நேரடிப் பொறுப்பில் ஆரம்பக் கல்வியின் தரத்தை உயர்த்தும்.

(ஆ) ஆசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்தி அதிக ஊதியம் அளிக்கும்.

(இ) பாடப் புத்தகங்களைத் தேசீயமயமாக்குவது போன்ற ஏற்பாடுகளை நிராகரிக்கும். ஏனெனில் இந்த ஏற்பாடுகள் சர்க்கார் கொள்கைகளை இளம் உள்ளங்களில் பதிய வைக்கவே மேற்கொள்ளப் படுகின்றன.

(ஈ) குடிகள் தங்கள் குழந்தைகளுக்குத் தங்கள் விருப்பப்படி அரசாங்கக் குறுக்கீடின்றிக் கல்வி அளிக்கும் ஜீவாதார உரிமையை அளிக்கும்.

(உ) பல்கலைக் கழகங்கள், மற்ற கல்வி ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் தனித்தன்மையைப் பாதுகாக்கும்.

59. இது விஞ்ஞான - தொழில் நுட்ப யுகமாகும். ஆகவே, கல்வித் திட்டத்தின் ஆரம்பப்படிகளிலிருந்தே மக்களுக்கு விஞ்ஞானம் - தொழில் நுட்பப் பயிற்சிகளில் ஈடுபாடும் பயிற்சியும் தோற்றுவித்து முடிவில் விவசாயத் தொழில் துறைகளில் விஞ்ஞானத்தை தொழில் நுட்ப ரீதியில் பயன் படுத்துவது அவசியமாகும். இந்தக் குறிக்கோளுக்காக பள்ளிக் கூடங்களிலும், மற்ற கல்வி நிலையங்களிலும் விஞ்ஞான ஆய்வு கூடங்களையும் பட்டறை வசதிகளையும் போதிய அளவில் சுதந்திரக் கட்சி செய்து தரும். மேலும் கட்சி அநேக ஆரம்ப உயர்தர தொழிற் பள்ளிகளை அமைக்கும். இதனால் புத்தகக் கல்வியில் விருப்பமில்லாத இளைஞர்கள் நடுத்தர உயர்தரப் பள்ளிநிலைகளிலிருந்து தொழிற்கல்வி பயில

கோடும், செயல்களோடும் இருந்து வரும்போது நம்பத் தகுந்த வல்லரசுகளுடன் தகுந்த பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்து கொள்வது சமயோசிதம் மட்டுமல்ல நியாயமுமாகும். கம்யூனிஸ்ட் சீனாவை ஆசியாவில் சுதந்திரத்துக்கு முக்கிய பகைவனாக இக்கட்சி கருதுகிறது. ஆகவே ஆசியாவின் தெற்கு, தென்கிழக்கு நாடுகள், ஆஸ்திரேலியா ஆகியவைகளுக் கிடையில் ஒரு பிராந்திய பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றை உண்டாக்கி அதில் இந்தியா தனக்குரிய பங்கைச் செய்ய வேண்டுமென்று சுதந்திரக் கட்சி கருதுகிறது. இந்த வழியில் தான் இந்தியாவிற்கு பாதுகாப்பு இருக்கிறது. நம் நாட்டு எல்லைப்புற மக்களுடன் முன்யோசனையோடு கூடிய கொள்கையைக் கடைப்பிடிப்பது நாட்டுப் பாதுகாப்புக்கு உதவியாய் இருப்பதுடன், அவர்களுடன் உள்ள தொடர்பையும் பலப்படுத்தும் என்று கட்சி கருதுகிறது.

54. இந்த சூழ்நிலையில் தென் வியட்னாம் சர்க்காரும், மக்களும், அவர்களுக்கு உதவிபுரியும் நாடுகளும் கம்யூனிஸ்ட் சீனா அதன் உபகிரகமான வடவியட்னாம் ஆகியவற்றின் ஆக்ரமிப்பையும், விஸ்தரிப்பையும், எதிர்த்துப் போராடுவதைக் கட்சி ஆதரிக்கிறது. இது சம்மந்தமாக காங்கிரஸ் ஆட்சி கையாளும் தற்கொலைக் கொப்பான போக்கு உண்மையில் நம் பகைவனுக்கு உதவியும், சௌகரியமும் அளித்து வருவதுகண்டு கட்சி வேதனை அடைகிறது.

55. கட்சி கம்யூனிஸ்ட் சீனாவைப் பொருத்த மட்டில் கண்காணிப்பான உறுதியானக் கொள்கையைக் கடைப்பிடிக்கும். சாத்தியமான அளவு விரைவில் சீனாவின் ஆக்ரமிப்பை அகற்றி, இந்தியப் பிரதேசங்களை மீட்கும். திபெத்தை கம்யூனிஸ்ட் சீனாவின் பிடியிலிருந்து விடுவிப்பதையும், தலாய்லாமாவை வெளிநாட்டிலிருக்கும் திபெத்திய அரசாங்கத் தலைவனாக அங்கீகரிப்பதையும் கட்சி ஆதரிக்கிறது.

56. இந்தியா – பாகிஸ்தானின் நட்புறவு முழு உபகண்டத்தின் நலனுக்கும் பாதுகாப்புக்கும் அவசியமானது என்று கட்சி நம்புகிறது. ஆனால் அதே சமயத்தில் சென்ற ஆண்டு பாகிஸ்தான் இந்தியாமீது படையெடுத்தது அதற்கு காஷ்மீர் விவகாரத்தில் இருந்திருக்கக் கூடிய நிலையை இழக்கச் செய்துவிட்டது என்று கருதுகிறது.

கல்வி

57. தற்பொழுது மாணவர்களிடையேயும், இளைஞர்களிடையேயும் ஒருமைப்பாடில்லாமல் குழப்ப

பான்மையினர் ஆகியோர்களது உரிமைகளையும் நலனையும் பாதுகாக்க அரசியல் சாஸனத்தில் அளிக்கப்பட்டிருக்கும் ஷரத்துகளை இக் கட்சி உள்ளன்புடன் பயனுள்ள வகையில் அமுல் செய்யும். சமூக, பொருளாதாரத் துறைகளில் பின் தங்கிய சமூகத்தினர்களான ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் ஆகியோருக்கு மத வித்தியாசமின்றி நன்மைகள் செய்ய பாடுபடும். பூரணமான தீண்டாமை ஒழிப்பு தீவிரமாகப் பின்பற்றப்படும்.

(ஆ) எந்த வகுப்பினர்களும் தங்கள் நல, உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைத்துக் கொள்ளும் சங்கங்களைக் கண்டிக்க வேண்டிய அல்லது தடை செய்ய வேண்டிய வகுப்புவாத ஸ்தாபனங்களாக கட்சி கருதாது.

64. எச்சரிக்கைகளை மதிக்காமல் காங்கிரஸ் கட்சி கடைப் பிடித்த கொள்கைகளின் பயனாக இன்று நாட்டில் பிளவு மனப்பான்மைகள் தோன்றியுள்ளன. மொழிப் பிரச்னை இப்போது பிரிவினை சக்தியாக மாறி வருகிறது. இதன் போர்வையில் மாநிலங்களில் அதிகாரத்திலிருப்பவர்கள் எல்லா சிறுபான்மையினர்களையும் இரண்டாந்தரப் பிரஜைகளாகப் பாவித்து வருகிறார்கள். சுதந்திரக் கட்சி இந்த சீர்கேட்டை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கும்.

65. கட்சி சிறுபான்மையினர் பிரச்னைகளைக் கவனிக்க, மத்தியிலும், மாநிலங்களிலும் நீதிச் சார்புள்ள நிரந்தரக் கமிஷன்களை அமைக்கும்.

## பிரசார சாதனங்கள்

66. பல்வேறு பிரசார சாதனங்கள் மீது அதிகார வர்க்கத்தின் ஆதிக்கமோ, ஏகபோகமோ ஏற்பட வழி செய்யும் எல்லா முயற்சிகளையும் சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது. ஒலிபரப்பு, டெலிவிஷன், திரைப்படப் பிரிவு ஆகியவற்றின் நிர்வாகத்தை சுதந்திரமாக இயங்கும் கார்ப்பரேஷன்கள் வசம் ஒப்படைக்க வேண்டும். மேற்கண்ட துறைகளில் இயங்கும் மற்ற தனியார்களும் மேற்படி சட்டபூர்வமான நிறுவனங்களுடன் போட்டியிட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கட்சி கருதுகிறது.

67. பத்திரிகைகளின் சுதந்திரத்தை, ஆளும் கட்சியின் செல்வாக்கின் கீழ்க் கொண்டு வரச் செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் எதிர்த்து அவைகளின் சுதந்திரத்தை நிலைநிறுத்தக் கட்சி தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்யும்.

இயலும். இது நாட்டின் தொழில் அபிவிருத்திக்கு உதவுவதுடன் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதுவும் குறிப்பாக கல்வி கற்றவர்களுடைய வேலையின்மையைத் தீர்க்கும்.

## மதம்

60. அரசியல் சாசனத்தில் உத்திரவாத மளித்துள்ளபடி மக்கள் தங்கள் விருப்பப்படி மத நம்பிக்கைகளைப் பின்பற்றவும், மத சுதந்திரத்தை கட்டுப்பாடன்றி அனுபவிக்கவும் உரிமையுண்டு என்பதை ஏற்றுக் கொள்ளும் அதேசமயத்தில், சுதந்திரக் கட்சி அரசாங்கமும், மத சம்மந்தமாக அக்கறை காட்ட வேண்டிய அவசியம் என்று கருதுகின்றது. ஏனெனில் சட்டங்களின் சக்தியை விட, மத நம்பிக்கைதான் மக்களிடத்தில் நன்னடத்தையும், நல்லொழுக்கமும் ஏற்பட பய பக்தியையும் ஆர்வத்தையும் உண்டாக்கும்.

61. பெரும் ஜனத் தொகையும், பலதரப் பட்ட மக்களையும் கொண்ட நாட்டில், ஜன நாயகம் தழைப்பதற்கு சட்டத்தின் ஆட்சி இன்றியமையாததாகும். அதற்கும் மேலாக தெய்வாம்சம் கொண்ட மனச்சாட்சியின் செல்வாக்கு, தர்மத்தின் செல்வாக்கு நாட்டின் அரசால் புதுப்பிக்கப்பட்டு, வரவேற்கப் பட்டு பேணி வளர்க்கப்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். அப்பொழுது தான் ஜனநாயகம் பெரும்பான்மையின் கொடுங்கோலாகவோ, ஆளும் கட்சியின் சர்வாதிகாரமாகவோ உணரப் படாமல் இருக்கும். சுதந்திரக் கட்சி இக்கருத்தை ஏற்று எல்லா மதங்களையும் வ தப்புகளையும் சார்ந்தவர்களுக்குச் சமர்ப்பிக்கிறது.

62. ஆகவே சுதந்திரக் கட்சி மக்கள் வாழ்க்கையில் மதத்திற்கு உரிய ஸ்தானத்தை மீண்டும் அளிக்க எல்லா முயற்சிகளும் செய்யும். குறிப்பாக :

(அ) எல்லா வகுப்பினர்களுக்கும் அவர்களுடைய மத ஸ்தாபனங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் மதிப்பு அளிக்க உறுதி கூறுகிறது.

(ஆ) எல்லா மதத்தினரும் தங்கள் மத ஸ்தாபனங்களுக்குச் சேர்ந்த தர்ம சொத்துக்களையும் மற்ற உடைமைகளையும், சர்க்கார் தலையீடுயின்றி தாங்களே நிர்வகித்து பரிபாலனம் செய்து கொள்ள அதிகாரம் வழங்கும்.

(இ) மதஸ்தாபனங்கள், தர்ம ஸ்தாபனங்கள் இவற்றின் வருமானத்துக்கும், சொத்துக்கும், இவற்றுக்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கும் வரி விலக்களிக்கும்.

## சிறுபான்மையினரும், பின்தங்கிய வகுப்பினரும்

63. முஸ்லிம்கள், கிருஸ்துவர்கள், சீக்கியர்கள் மொழிவாரி சிறு பான்மையினர் உட்பட்ட மற்ற சிறு

## VI. முடிவுரை

68. இதுதான் சுதந்திரக் கட்சி எவைகளைச் செய்யும், எதைச் சாதிக்க முடியும் என்று நம்புகிறது என்ற தேர்தல் அறிக்கை.

69. பொருளாதார சக்திகளை அரசாங்கத்திடம் குவித்து அதிகாரத்தை ஆளும் கட்சியே அனுபவிக்கும் நோக்கத்தில் கம்யூனிஸ்டுகளைப் பின்பற்றும் காங்கிரஸ் கட்சியினின்றும் நாம் முற்றிலும் மாறுபட்டு நிற்கிறோம். காங்கிரஸ் கட்சி தான்தோன்றித் தனமாக நாசகார கொள்கைகளைப் பின்பற்றிக் கொண்டு தன்னுடைய தோல்விகளை மறைப்பதற்காக விவசாயி, வியாபாரி, பொற்கொல்லர், சுயதொழில் செய்வோர், தொழிலதிபர், வர்த்தகர், பாங்கர் ஆகியோரைப் பலியாடுகளாக்கி அவர்கள் மீது பழி சுமத்தி வருகிறது.

70. தேசத்தின் பகுதிகளை அன்னியர்களுக்குப் பறி கொடுத்த ஆளுங்கட்சி, அப்பிரதேசங்களை மீண்டும் மீட்டுவிடுவோம் என்ற போலி வாக்குறுதிகளால் தன் குற்றங்களை மறைக்கப் பார்க்கிறது. இப்பொழுது அவர்கள் அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அவர்களால் எப்போதும் கடைப்பிடிக்கப்பட்ட பின்வரும் கொள்கைகளை மீண்டும் பின்பற்றுகிறார்கள்.

- —அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல்,
- —ஊழல், லஞ்சம் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல்,
- —இன்னும் இரு தசாப்தங்களில் சுவர்க்க போக வாழ்க்கையைக் கொண்டுவந்து விடுவதாக பொய் வாக்குறுதியளித்தல்.
- —எதிர்க் கட்சிகளை ஆதரிப்பவர்களை பழிவாங்கப் போவதாக பயமுறுத்தல்.

71. இவை எல்லாவற்றிற்கும் மாறாகச் சுதந்திரக் கட்சி பல நூற்றாண்டுகளாக மக்களை மகத்தான, உன்னதமான சாதனைகளை செய்யத் தூண்டிய விவேகமான சுய முயற்சியால் முன்னேறும் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஆக்கபூர்வமான மாற்றுத் திட்டத்தை வாக்காளர்களின் முன் வைக்கிறது. தனி மனிதர்கள் நிலையில் கட்டுப்படுத்தப்பட்ட அறிவுடைமையுடன் கூடிய சுய முன்னேற்ற வாய்ப்பும், அரசாங்க நிலையில் சேவா நோக்கமுமே எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட உறுதியான அஸ்திவாரங்களாகும் என சுதந்திரக் கட்சி நம்புகிறது.

72. சுதந்திரக்கட்சி மத்திய ஆட்சியிலோ அல்லது ஏதாவது மாநிலத்திலோ வெற்றி பெற்று அரசாங்கம் அமைக்க அழைக்கப்படுமானால் கட்சிக்கு வெளியில் உள்ள திறமைசாலிகளையும் சேர்த்துக்கொண்டு மிகவும் திறமையான ஆட்சியை அளிக்கும்.

73. எல்லாவற்றிற்கும் மேலாக காந்திய லட்சியமான பொதுவாழ்வில் தர்மத்திற்கு ஆட்சிக்கு முதலிடம் கொடுக்கும் கொள்கையைப் புதுப்பிக்க சுதந்திரக்கட்சி பாடுபடும். அதுவே நேர்மையும், வாழ்க்கை வளமும் நீடித்து நிலவ உண்மையான ஆதாரமாகும்.

டிசம்பர்-1966.

---

Published by Mr. S. V. Raju for Swatantra Party.
Printed by A. Ananthanarayanan, Paramakalyan Agencies, Madras.4.